

# உறவுகளின் நினைவில்...

சுப்பிரமணியம் பாலசுந்தரம்

முத்து மாமா





பிள்ளைகள்


# அப்பா...

வெற்றிடம் ஆகிப் போனதே – இன்று
அப்பா என்றழைக்கும் சொல் நின்று
அருவமாகிப் போனதால் – இன்று
அழைக்க முடியவில்லை அப்பா என்று
எமக்காக மட்டுமா உழைத்தீர்கள் அப்பா – என்றும்
ஊருக்காகவும் உடம்பால் உழைத்தீர்களே அப்பா நின்று
மீண்டுமொரு முறை லண்டனில் சந்திப்போம் – என்று
மனமுவந்த வேளை நின்று
மீளாத்துயில் கொண்டீர்களே அப்பா – என்றும்
மீளாத் துயரில் எம்மை ஆழ்த்தி
திடீர் சுகயீனம் குறித்து நாம் அதிர்ச்சியுற்று – அன்று
துடித்து கூடிக் கதைத்து மனமாறும் முன்பே
என்ன அவசரம் காலனுக்கோ – அன்றி
அருமை மருமகனை அழைக்க எம்
அருமை அம்மம்மா கொண்ட ஆசையோ – இன்று
எம்மிடமிருந்து உங்களைப் பிரித்தது
கதறியழ முடியவில்லை அப்பா ஆனால் – என்றும்
கூடிக் குலாவும் வேளை கண்ணீர் மல்க
குமுறிக் குமுறிக் கதறுகின்றோம் மனத்துள் – என்றும்
குறையாது எம் கவலை குறையாது ஒரு நாளும்
முடியாது அப்பா முடியாது உங்கள் உருவத்தை
எம்மால் மறக்க முடியாது


அருமை மக்கள்



மக்கள், மருமக்கள்



பொன்விழாக் கண்ட இல்லறம்




பேரப்பிள்ளைகள்

# *Ammappa – Our Hero*

*There is no single word to describe how special you are,*
*When all you did is made us smile from far.*
*We know it's not going to be the same anymore,*
*And all we want is to see you once more.*
*All the loved ones we lost along the way,*
*will be waiting to greet you,*
*A place in our hearts, will always be kept for you,*
*Dreams are the only times we'll meet one another,*
*Years and years will go by and we will miss you more than ever.*
*Your time on Earth has been filled with glory & sparkles,*
*God left the kindest gentleman fly away from our lives,*
*Little by little, time goes by & eventually we'll all be*
*reunited once again,*
*You'll be the greatest history in the whole Tamil nation.*
*But Grand-dad, why go so far away from us?*

*From your loving grand-daughters,*
*Lindu, Sindu & Sarme*




*We will never forget you and you will always be in our hearts.*

*-Athiyan-*

# *Dear Appapa*

*We know you are not here with us anymore, but we find comfort in the fact that you are in a better place. You were a courageous and noble man who had great stature and presence wherever you went. You were always willing to help people and you definitely left an impact on their lives which will never be forgotten. Our only regret is the fact we were apart from you, and did not get the chance to grow up with you around us. However in the very few times that we did meet you, we were honored and graced with a presence that we shall never forget as long we live.*
*We live in your memory and your shadow, and will dearly miss you.*

***Love Always***
***Vinthiya, Nirrosh and Sunjiive***





# *Ammappa*

*Ammappa it's so sad that you've passed on,*
*In our hearts you'll never truly be gone,*
*You had a long and wonderful life,*
*Seven children and a loving wife,*
*You gave so much to the community,*
*Helped people less fortunate all for free,*
*Oh Ammappa, why it happened so quick,*
*Only for a week had you been so sick,*
*Though we are glad you suffered little pain,*
*By taking your life there was nothing to gain.*

*by Sankavi & Sathiyan*

# *Granddad*





Grandpa is a really nice and generous person
Reading and reading is what grand dad really loves.
All he did was work, work and work hard for the family.
Nearly all the time he took us to the fish market.
Delivering services to the people of his village.
Doing teaching is what he sometimes does.
Always caring for people.
Deciding what is best for his family is what he is good at.

-Bhavina-

## சகோதரிகளின் புலம்பல்



எங்கள் இரத்தத்தின் இரத்தமே
எம் அன்பு நிறை அண்ணாவே
இங்கு அக்காவை இழந்து
இருக்கையில் வந்ததே உன்பிரிவு
இங்கிதமாக இனிக்கப் பேசும்
உன் அன்பு முகம் எங்கே?

கூடப்பிறந்த உன்போலக்
குணமான நல்லவனை நாமிழந்து
வாடிக்கதறி அழுகின்றோம்
வந்த கொடிய வியாதியை நோகின்றோம்
தேடற்கரிய அண்ணாவே
சமூக சேவை பல செய்தாயே
நாடி வந்தோர்க்கு சகல உதவிகள்
நல்கினையே இப்போ எங்கு இருக்கின்றாய்

ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

அன்புச் சகோதரிகள்

## எமது நினைவில் அமரர் சு.பாலசுந்தரம் அவர்கள்....


10.02.2008 ஞாயிற்றுக்கிழமை வவுனியா, மகா றம்பைக்குளத்தில் சிவபதம் அடைந்த யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலசுந்தரம் அவர்களின் மறைவையொட்டி எமது இதயபூர்வமான அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

எமது அரியாலையூர் ஈன்றெடுத்த உத்தம புருஷர்களில் ஒருவராகக் கணிக்கப் பெற்ற அமரர் அவர்கள் அரியாலை சன சமூக நிலையத்தின் செயற்றிறன் மிக்க முன்னாள் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர். எமது ஊர் மக்களின் அன்பிற்கும் மதிப்புக்கும் உரியவராகத் திகழ்ந்த அமரர் அவர்கள் நீதிக்கும் நியாயத்திற்கும் உரிமைக்கும் என்றும் தற்துணிவுடன் உழைத்த ஒரு சிறந்த சமூக சேவையாளர் ஆவார்.

எமது முன்னாள் தலைவர் சு.பாலசுந்தரம் அவர்களின் எமது நிலையத்துடனான தொடர்பு அறுபது வருடங்களுக்கு மேலானது. 1947ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "வாசிகசாலை" வளர்ச்சி அடைந்து 1949இல் அரியாலை சன சமூகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. இந்த ஆரம்பத்திற்கு 1947இல் வித்திட்ட அந்நாள் இளைஞர்களுள் அமரர் அவர்களும் ஒருவராக செயற்பட்டதாக வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன. அன்று தொடக்கம் சிவபதம் அடையும் வரை எமது நிலையத்தின் செயற்பாடுகளிலும் வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் அமரர் இயங்கினார்.

1961இல் நிலைய கௌரவ பொருளாளராகவும் 1973 பிற்பகுதியிலிருந்து 1975 முற்பகுதிவரையான காலப்பகுதியில் நிலையத் தலைவராகவும் செயற்பட்டார். 1974இல் நிலையம் வெள்ளிவிழா கொண்டாடியபோது நிலையத் தலைவராக மட்டுமின்றி கந்தையா இல்லத் தலைவராகவும் விழாவையொட்டி வெளியிடப்பெற்ற மலரினை சிறப்பே ஆக்கும் நோக்கில் மலர் வெளியீட்டுக் குழுத்தலைவராகவும் செயற்பட்டார். பின்பு சில வருட காலம் கழிந்த நிலையில் 1990, 1997 தொடக்கம் 1999 வரையான காலப்பகுதியில் மீண்டும் நிலையத் தலைவராக விளங்கிய பெருமைக்குரியவர்.

அரியாலை சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு அவர் நெடுங்காலம் ஆற்றிய சேவையைப் பாராட்டும் முகமாக 1999ஆம் ஆண்டு இடம் பெற்ற நிலையப் 'பொன்விழா' வில் அமரர் அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதை இச்சந்தர்ப்பத்தில் பெருமையுடன் நினைவு கூறுகின்றோம்.



அன்றைய அரியாலை சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்கள்

அமரர் சு.பாலசுந்தரம் அவர்கள் அரியாலையூருக்குப் பொதுவாக ஆற்றிய சேவையை ஈண்டு சுருக்கமாக வெளிக்கொணர்வது பொருத்தமானது எனக் கருதுகின்றோம். பொதுவான சமூக அபிவிருத்தி, கல்வித்துறை, கலைத்துறை விளையாட்டுத் துறை ஆகியவற்றின் வளர்ச்சி சம்பந்தமாக அரியாலையூரில் இயங்கும் சகல மக்கள் அமைப்புக்களிலும் இணைந்து அமரர் ஆற்றிய சமூகப்பணி பரந்துபட்டது. மற்றும் அவரின் குலதெய்வமாகிய அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் பரிபாலன சபையிலும் இணைந்து அமரர் ஆற்றிய சமயப் பணியும் மெச்சத்தக்கது.

தனது நெருங்கிய உறவுகளின் நலன் கருதி அமரர் அவர்கள் அவரின் பாரியாருடன் வவுனியாவுக்கு அண்மையில் குடிபெயர்ந்து வாழ்ந்து வருகையில் சடுதியாக நோய்வாய்ப்பட்டு அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து நாம் பெரிதும் கவலை அடைகின்றோம். எமது அன்பு கலந்த இதய பூர்வமான அஞ்சலியை சமற்பிக்கின்றோம்.

அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உற்றார், உறவினருக்கும் பொதுவாக அரியாலையூர் மக்கள் சார்பாகவும், அரியாலை சனசமூக நிலையத்தின் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மனின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

ஓம்சாந்தி

**நிர்வாகம்,**
**அரியாலை சனசமூக நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**



உறவும், சுற்றமும்

# அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே.....

*1949* எனக்கு அப்பொழுது வயது ஒன்பது. "யாழ். அரியாலை புங்கங்குளம் வீதியில் ஓர் வாசிகசாலையை நாம் நிறுவிக்கொள்ளவேண்டும்." என்ற தணியாத தாகம் மீற ஓடித்திரிந்த அன்றைய வாலிபர் குழுவில் தளபதியாகி - நிலையத்தின் அத்திபாரம் முதல் இன்றைய வாசிகசாலை, நூல்நிலையம், நேர்சரி, ரியூட்டரி, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, உள்ளக விளையாட்டுக்கூடம், பிரம்மாண்ட கலை அரங்கம், அசோக மர வரிசை நடுகை என ஒவ்வொன்றைச் செயல்படுத்தும் இளைஞர் குழுவிற்கு முன்நின்று உதவிகள் பெற முடிந்தவர்களிடமெல்லாம் அவர்களிடம் தனது குழுவுடன் சென்று பேசிச் செயல்படுத்தி - யாழ் மாவட்டத்திலேயே சகல நிலைகளிலும் முதன்மை ஸ்தானத்திலிருப்பது அரியாலை சனசமூகநிலையம் தான் என்ற அரசமுத்திரை பொறித்திட்ட பெருமை பெற்றுத்தந்தவர்களுள் அமரர் பாலசுந்தர அண்ணர் முன்னிலைப்படுத்தப்பட வேண்டியவர். அன்றும் இன்றும் - ஏன் தனது இறுதிக்காலத்திலும் அ.ச.ச.நிலையத்தையே நெஞ்சிருத்தி நினைத்து வாழ்ந்த நேர்மையாளனும் அவரே - எங்கள் பாலசுந்தர அண்ணர். பிள்ளைகள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் - தான் பிறந்தமண்ணை விட்டுப்புலம் பெயரப் போவதில்லை என்ற பெருநோக்குடன் வாழ்ந்து காட்டியவர் அமரர் பாலசுந்தர அண்ணர்.

இடைப்பட்ட அந்த நாட்களில் பின்னேரப் பொழுது என்றவுடன் சிறுசுகள் - இளசுகள் - பெருசுகள் எல்லாம் அ.ச.ச.நிலையத்தில் கூடிவிடுவர்- வாசிக்க, பாட்டுக்கேட்க, விளையாட ஒரு பக்கம் கிரிக்கட்- ஒருபக்கம் புட்போல் - ஒருபக்கம் ரென்னிஸ்- ஒருபக்கம் வொலிபோல் என வயசு வித்தியாசமின்றி விளையாட்டுக்கள் நடந்து கொண்டிருக்க பாலசுந்தர அண்ணர் ஓடிஓடி எல்லாக்களங்களிலும் கொஞ்சக் கொஞ்சநேரம் தடம் பதித்துவிட்டு, கடைசியில் அவர் வந்து சேரும் இடம் வொலிபோல் கோட்தான், விழுந்து விழுந்து விளையாடிவிட்டு இருட்டு வர அடையாளம் தெரியும் போதுதான் வொலிபோல் நெற்றை அவிழ்ப்பார். பிறகு நேரே ரோட்டுக்கிணற்றடியில் மேல் கழுவல், அரைக்காற்சட்டை அரைவாசி நனைந்துவிடும், ஆம்கட்பனியன் தோளில் தொங்கி நீர் சிந்தும், விளையாடி விளையாடி திணவெடுத்த தேகப் பொலிவில் முகச்சிரிப்பில் முப்பத்திரெண்டு பற்களும் முத்தழகு தரும். தேகப்பயிற்சியின் வேகத்திறன் அறிந்தவர் அமரர் பாலசுந்தர அண்ணர்.

அது1950, அரியாலை சனசமூகநிலைய ஆண்டுவிழா வரப்போகிறது. சொல்லவாவேண்டும்? நிலையத்துக்கு வெள்ளை அடிப்பது. மைதானத்தைச் சீர்படுத்துவது பகல் இரவு நிகழ்ச்சித்தயாரிப்பு விளையாட்டுப்போட்டிகள், மேடைக்கலை நிகழச்சிகள், விழாத்தலைவர் வரவேற்பு ஒலி ஒளி அமைப்பு, சோடனை வேலை, மைதான மத்தியில் நிலையக் கொடி ஏற்றிவைக்க நெடியதொரு கொடிக்கம்பமென கமுக மரம் நடுதல், விருந்துபசாரம் என விதவிதமாக திட்டங்கள் மத்தியில் கொமிற்றி கூடியிருக்க பாலசுந்தர அண்ணர் கையில் புத்திகூர்மையாக ஒரு பொறுப்பு நாடகம்!, நாடகம் நல்லாயிருக்க வேணும். ஒரு கொப்பியும், பேனாவும், செயற்திட்டங்கள் வரைபடமாகின்றன.

இப்பொழுது என்னுள் இன்னுமோர் ஞாபகம்!

பாலசுந்தரம் அண்ணர் பார்ட்டியின் சைக்கிள் சீற்றின் ஸ்பிறிங்குகள் உடைந்துவிட்டன. அப்படியொரு "யாழ்தேவி" வேக சைக்கிள் உழக்கல் காசுசேர்ப்பு, ஆளாளுக்குக்கூடிச்சேர்ந்து விழாவின் நிகழ்ச்சிகளுக்கான ஆட்கள் சேர்ப்பு, பரிசுகள் சேர்ப்பு!

பகல் விளையாட்டுப்போட்டிகள் முடியும் நேரம், கயிறு இழுத்தல், வினோத உடைப்போட்டி என விளாசித்தள்ள வேண்டும். பிறகு இரவு மேடையில் கலைநிகழ்ச்சிகள் இரவு 7மணிக்கு ஆரம்பமாகிவிடவேண்டும். விளையாட்டுப் போட்டிகள் முடிவடைய வினோத உடையைப் பார்த்துவிட்டு தத்தம் வீடுகளுக்குப் போனவர்கள் வந்தனரோ வரேல்லையோ, பொதுக்கூட்டம் 7மணிக்குத் தொடங்கவேணும். பிறகு பகல் விளையாட்டுப் போட்டிப் பரிசுகள் வழங்கிப் போட்டு கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கலாம். எங்கடை நாடகம் பார்க்கவென நாலாபக்கமுமிருந்து சனம் வரும், அதனால் நாடகத்தை 2மாத மென்றாலும் நல்லாப் பழகவேணும். பிறகு அண்ணாவியாரிட்டத் தப் போலாது பாலசுந்தரம் குழுவினர் ஆலமரத்தடியில் மாலைநேரத்திலிருந்து இரவு 9 மணிவரை போட்ட செயற்திட்டம் முடிவடைய, நேரே ஒவ்வொருவரும் தத்தம் வீடு போகின்றனர். நாளைக்குக்காலமை அண்ணாவியாரைட்டைப் போகவேணும் என்ற சிந்தனையோடு பாலசுந்தரண்ணர் தன் வீட்டுக் கேற்றைத் திறக்கிறார். ஏனென்றால் நாடக விஷயமாக முடிவெடுக்க உரியவர் அண்ணாவியார்தான்..! எல்லோருமாய் முடிவெடுத்த ஒரே முடிவு அது. அங்கே ஆலமரமும், வாசிகசாலையும், கந்தையா அண்ணை

கடையும்பூட்டி, இடம் வெறிச்சோடிக்கிடக்கு புங்கங்குளம் வீதி இரவின் மடியில் ஒரு வெள்ளைநாய் ஆலமர வேருக்கிடையே சரிந்து படுத்துக் கொள்கிறது. வாசிகசாலை செக்கியூரிட்டியாக்கும்! எங்கள் வாசிக சாலைக்கு இயற்கையின் பாதுகாப்பு!

விளையாட்டு என்றால் அரைக்காற்சட்டையுடனும், ஆம்கட் பெனியனுடனும் ஓடி விளையாடி மைதானமண் உரஞ்சிய சிறுசிறு சிராய்ப்புகள் கொஞ்சம் எரிச்சலைக் கொடுத்தாலும் விளையாடி விளையாடி திணவெடுத்த தோள்களும், திண்ணமான தேக அமைப்பில் உருவான உடல்வாகு பாலசுந்தர அண்ணருக்கு.

விளையாட்டில் விருப்பம் எப்படியோ அதே துடிப்புத்தான் நடிப்பிலும், நன்றாகப் பாடவும் செய்வார். அதனால்தான் பெருமதிப்புக்குரிய எங்கள் பெரியார்(அமரர்) அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை அவர்கள் ஆண்டு விழா (1950) நாடகமாகிய 'நளதமயந்தி' யில் ஹீரோ நளமகாராஜன் வேடம் பாலசுந்தரம் தான் தீர்ப்புச் சொல்லிவிட்டார். பாலு தான் தமயந்தி, ஸ்திரீபார்ட் சரிதானே? என்று தன்மகன் சபாலசிங்கத்தை ஒரு வாக்குப்பார்வை பார்த்தார். எனக்குப் போய் பெண்வேஷமா? பாலசிங்கம் (மாஸ்ரர் சங்கீத பூஷணம்) தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார். தம்பியவை 'நடிக்கிறதெண்டா சொந்தக்குரலில் பாடவும் வேணும் தெரியுமெல்லோ? பாலசுந்தரமும் பாடுவான், என்ர பாலுவும் பாடுவான், பாட்டிலதான் நாடகம் ஓட வேணும்' தகப்பன் சொன்னால் தட்டமுடியாதே! பாலசிங்கம், பாலசுந்தரத்தைப் பார்க்க பாலசுந்தரம் சந்தோஷத்தில் வானத்தில் பறந்தார். ஏன் தெரியுமா? வில்வந்தெருவில் இந்த இரண்டு பாலாக்களும் மிக நெருக்கமான (உறவின) நண்பர்களாய் திரிபவர்கள். இப்பொழுது நள தமயந்தி யில் சதிபதியாக.... எத்துணை பொருத்தம்! இவர்களிருவரின் மகன்வேடம், நளன் - தமயந்தியின் மகனாக அண்ணாவியார், ஐயா எனக்கே தந்துவிட்டார். ஏனெனில் நான் நன்றாகப்பாடுவேன் என்பதை அவரின் பிள்ளைகள் (எனது அக்காமார்) சொல்லியிருப்பார்கள்...

நானும் முதல் மேடையேறப்போகிறேன். அதுவும் நான் கலையார்வம் மிக்கவன் என்பதால் என் முன்னேற்றத்தில் பங்கெடுத்த இருவர் ஒருவர் பாலண்ணர், அடுத்தவர் பாலசுந்தரம் அண்ணர், இவர்களிருவரின் மகனாக நான்! (எனக்குத்தலை கொஞ்சம் கனத்தது) என்னைப் பார்த்துக் கொண்டிருந்த எனது ஒரே உடன்பிறப்பு (சாந்தம்) அண்ணரும் தனது 'கொலரை' கொஞ்சமாக மேலே எடுத்து விட்டுக்

1949 எனக்கு அப்பொழுது வயது ஒன்பது. "யாழ். அரியாலை புங்கங்குளம் வீதியில் ஓர் வாசிகசாலையை நாம் நிறுவிக்கொள்ளவேண்டும்." என்ற தணியாத தாகம் மீற ஓடித்திரிந்த அன்றைய வாலிபர் குழுவில் தளபதியாகி – நிலையத்தின் அத்திபாரம் முதல் இன்றைய வாசிகசாலை, நூல்நிலையம், நேர்சரி, ரியூட்டரி, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, உள்ளக விளையாட்டுக்கூடம், பிரம்மாண்ட கலை அரங்கம், அசோக மர வரிசை நடுகை என ஒவ்வொன்றைச் செயல்படுத்தும் இளைஞர் குழுவிற்கு முன்நின்று உதவிகள் பெற முடிந்தவர்களிடமெல்லாம் அவர்களிடம் தனது குழுவுடன் சென்று பேசிச் செயல்படுத்தி – யாழ் மாவட்டத்திலேயே சகல நிலைகளிலும் முதன்மை ஸ்தானத்திலிருப்பது அரியாலை சனசமூகநிலையம் தான் என்ற அரசமுத்திரை பொறித்திட்ட பெருமை பெற்றுத்தந்தவர்களுள் அமரர் பாலசுந்தர அண்ணர் முன்னிலைப்படுத்தப்பட வேண்டியவர். அன்றும் இன்றும் – ஏன் தனது இறுதிக்காலத்திலும் அ.ச.ச.நிலையத்தையே நெஞ்சிருத்தி நினைத்து வாழ்ந்த நேர்மையாளனும் அவரே – எங்கள் பாலசுந்தர அண்ணர். பிள்ளைகள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் – தான் பிறந்தமண்ணை விட்டுப்புலம் பெயரப் போவதில்லை என்ற பெருநோக்குடன் வாழ்ந்து காட்டியவர் அமரர் பாலசுந்தர அண்ணர்.

இடைப்பட்ட அந்த நாட்களில் பின்னேரப் பொழுது என்றவுடன் சிறுசுகள் – இளசுகள் – பெருசுகள் எல்லாம் அ.ச.ச.நிலையத்தில் கூடிவிடுவர்– வாசிக்க, பாட்டுக்கேட்க, விளையாட ஒரு பக்கம் கிரிக்கட்– ஒருபக்கம் புட்போல் – ஒருபக்கம் ரென்னிஸ்– ஒருபக்கம் வொலிபோல் என வயசு வித்தியாசமின்றி விளையாட்டுக்கள் நடந்து கொண்டிருக்க பாலசுந்தர அண்ணர் ஓடிஓடி எல்லாக்களங்களிலும் கொஞ்சக் கொஞ்சநேரம் தடம் பதித்துவிட்டு, கடைசியில் அவர் வந்து சேரும் இடம் வொலிபோல் கோட்தான், விழுந்து விழுந்து விளையாடிவிட்டு இருட்டு வர அடையாளம் தெரியும் போதுதான் வொலிபோல் நெற்றை அவிழ்ப்பார். பிறகு நேரே ரோட்டுக்கிணற்றடியில் மேல் கழுவல், அரைக்காற்சட்டை அரைவாசி நனைந்துவிடும், ஆம்கட்பனியன் தோளில் தொங்கி நீர் சிந்தும், விளையாடி விளையாடி திணவெடுத்த தேகப் பொலிவில் முகச்சிரிப்பில் முப்பத்திரெண்டு பற்களும் முத்தழகு தரும். தேகப்பயிற்சியின் வேகத்திறன் அறிந்தவர் அமரர் பாலசுந்தர அண்ணர்.

அது1950, அரியாலை சனசமூகநிலைய ஆண்டுவிழா வரப்போகிறது. சொல்லவாவேண்டும்? நிலையத்துக்கு வெள்ளை அடிப்பது. மைதானத்தைச் சீர்படுத்துவது பகல் இரவு நிகழ்ச்சித்தயாரிப்பு

விளையாட்டுப்போட்டிகள், மேடைக்கலை நிகழச்சிகள், விழாத்தலைவர் வரவேற்பு ஒலி ஒளி அமைப்பு, சோடனை வேலை, மைதான மத்தியில் நிலையக் கொடி ஏற்றிவைக்க நெடியதொரு கொடிக்கம்பமென கமுக மரம் நடுதல், விருந்துபசாரம் என விதவிதமாக திட்டங்கள் மத்தியில் கொமிற்றி கூடியிருக்க பாலசுந்தர அண்ணர் கையில் புத்திகூர்மையாக ஒரு பொறுப்பு நாடகம்!, நாடகம் நல்லாயிருக்க வேணும். ஒரு கொப்பியும், பேனாவும், செயற்திட்டங்கள் வரைபடமாகின்றன.


இப்பொழுது என்னுள் இன்னுமோர் ஞாபகம்!

பாலசுந்தரம் அண்ணர் பார்ட்டியின் சைக்கிள் சீற்றின் ஸ்பிறிங்குகள் உடைந்துவிட்டன. அப்படியொரு "யாழ்தேவி" வேக சைக்கிள் உழக்கல் காசுசேர்ப்பு, ஆளாளுக்குக்கூடிச்சேர்ந்து விழாவின் நிகழ்ச்சிகளுக்கான ஆட்கள் சேர்ப்பு, பரிசுகள் சேர்ப்பு!

பகல் விளையாட்டுப்போட்டிகள் முடியும் நேரம், கயிறு இழுத்தல், வினோத உடைப்போட்டி என விளாசித்தள்ள வேண்டும். பிறகு இரவு மேடையில் கலைநிகழ்ச்சிகள் இரவு 7மணிக்கு ஆரம்பமாகிவிடவேண்டும். விளையாட்டுப் போட்டிகள் முடிவடைய வினோத உடையைப் பார்த்துவிட்டு தத்தம் வீடுகளுக்குப் போனவர்கள் வந்தனரோ வரேல்லையோ, பொதுக்கூட்டம் 7மணிக்குத் தொடங்கவேணும். பிறகு பகல் விளையாட்டுப் போட்டிப் பரிசுகள் வழங்கிப் போட்டு கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கலாம். எங்கடை நாடகம் பார்க்கவென நாலாபக்கமுமிருந்து சனம் வரும், அதனால் நாடகத்தை 2மாத மென்றாலும் நல்லாப் பழகவேணும். பிறகு அண்ணாவியாரிட்டத்

அரியாலை சனசமூக நிலையத்தின் சார்பில் லண்டனிலிருந்து
வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்

உங்களில் ஒருவன்
**-லோகேஷ்-**




## பலரும் போற்றிடும் பாலசுந்தரம் அண்ணர்....

மறைந்த பெரியார் திரு.சு.பாலசுந்தரம் அவர்களை நினைவுகூரும் இதுதருணம், அவர் எமது ஊரின் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு, சகல மட்டத்திலும் உழைத்த செழிப்பான பசுமைநினைவுகள் எம் எல்லோரின் மனங்களிலும் நிழலாடுகின்றன. ஒட்டுமொத்த அரியாலைக்கும் ஒரு சமுதாயப் பிரதிநிதியாய் அவர் இனங்காணப்பட்டவர். சமூகமுன்னேற்றம் என்ற குறிக்கோள் கொண்ட இலட்சியத் தளத்தில் நின்று, வாழ்நாள் முழுவதும் இயங்கிய ஒரு பெரியாரை மரணம் இன்று எம்மிடமிருந்து பிரித்துவிட்டது.

கலை, விளையாட்டு, சனசமூகசேவை, தமிழின உணர்வு, முதலான உயர் தகைமைகளில் ஓங்கி விளங்கிய ஒரு மனிதரை நாம் இழந்துவிட்டோம். தலைமைதாங்கும் திறமையும், எதையும் சமாளித்து சமரசமாகக் காரியங்களைக் கையாளும் வல்லமையும், அஞ்சாமை நிறைந்த ஆற்றலும், அவரின் தனித் திறமைகளாக துலங்கின. இளைய மனிதர்களோடு முரண்பாடற்ற முறையில் பொது வேலைகளில் உழைத்து வந்த அவரின் பெருமையானது இன்று அவர் இல்லாத நிலையில் எம்மால் உருக்கமோடு உணரப்படுகின்றன. எல்லைகள் தாண்டி, தேசங்கள் தோறும் நம் ஊரவர்கள் வாழினும் அவரின் மரணத் துயரைக் கேட்டு அதிர்ந்த போக்கு அவர்மேல் அனைவரும் கொண்டிருந்த அன்பினை வெளிப்படுத்தியது.

உணர்ச்சிப் பிழம்பாய் உலாவியவர், உரையாடிப் பிணக்குகளைத் தீர்த்தவர், ஊர் ஒற்றுமையின் பாலமாக நின்றவர். சினத்தை வென்று சிந்தித்துச் செயற்பட்டவர். மண்ணதிர இன்று விண்ணடைந்த செய்தி வேதனைக்குரியது. நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் நிலையற்ற தன்மையது இவ்வுலகில்.. பலரும் போற்றிடும் பேறுபெற்றுப் பிரிந்த பாலசுந்தரம் அண்ணரது வாழ்வு பூரணமானது. அவரின் பிரிவால் வருந்தும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கலையும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**இவ்வண்ணம்**
**நோர்வே வாழ்ஊர் நண்பர்கள், சார்பாக**
**ந.கிருஷ்ண சிங்கம்**



## ஆற்றிய பணிகளுக்காக அஞ்சலிக்கிறோம்
## சமூகத்தொண்டன் சுப்பிரமணியம் பாலசுந்தரம்

அரியாலையின் புகழ்பூத்த நீண்ட வரலாற்றுடன் தன்னை இணைத்துக் கொண்டு வரலாற்றின் ஒரு பகுதியாகவே வாழ்ந்து வந்த அண்ணன் பாலசுந்தரம் அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து பெரும் துயர் கொண்டுள்ளோம். அவர் தடம் பதிக்காத இடமோ, துறைகளோ, அமைப்புகளோ, ஆலயங்களோ இல்லை எனும் அளவுக்கு அரியாலை மண்ணுடன் ஒன்றிப்போனவர்.

சுதெசிய விழா தொடக்கம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் வரை சித்தி விநாயகர் சிவன் கோயில் தொடக்கம் பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் வரை, அபிவிருத்திக்கழகம் தொடக்கம் கூட்டுறவுச் சங்கம் வரை, அவர் பெயர் சொல்லும்

அரியாலை ஜனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தவர். காசிப்பிள்ளை அரங்கு, குமாரகுலசிங்கம் ஞாபகார்த்த மண்டபம் உருவாக பெரும் முயற்சி செய்தவர். நிலையத்தில் இடம்பெற்ற இரவுப் பாடசாலை மற்றும் நிலைய முன்பள்ளி ஆகியவற்றின் நிர்வாகத்துக்குத் தூணாக இருந்தவர்.

அண்ணன் எந்நேரமும் மிகவும் சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருப்பார். சைக்கிள் ஓட ஓட அவர் இறங்கிக் கொள்ளும் விதமே அதற்குச் சாட்சி. எந்த வயது வித்தியாசமும் பார்க்காமல் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுகின்ற அவரது இயல்பு அவரை ஒரு தனித்துவமான தலைவராக அடையாளம் காட்டியது.

அரியாலையின் உண்மையான ஒரு சமூகத் தொண்டனை இன்று நாம் இழந்து நிற்கிறோம்.

**அரியாலையூர் ஒன்றியம்,**
**கனடா.**

## இதய அஞ்சலி



அரியாலை பிரதான பொது அமைப்புக்களான அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்டம், அரியாலை ஐக்கிய கழகம், அரியாலை அபிவிருத்திச்சங்கம், அரியாலை கலாமன்றம், அரியாலை சனசமூக நிலையம் மற்றும் அரியாலை மகாமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றின் நிர்வாகங்களில் பல ஆண்டுகளாக பிரதான பதவிகளை வகித்து சமூக சேவையாற்றிய அரியாலையூரின் பெருமகனும் மறைந்த நாடக ஆசான் அண்ணாவி சபாபதியின் நெறியாள்கையிலும் மற்றும் அதன் பின் வந்தோருடனும் பல புகழ் பெற்ற வெற்றி நாட்களில் பங்கேற்று கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவருமான

**சுப்பிரமணியம் பாலசுந்தரம்**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**அரியாலையூர் நண்பர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தில் பலமுறை தலைவராக இருந்தவரும் எமது கழக முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவருமான இளைப்பாறிய தபால் அதிபர்

**சுப்பிரமணியம் பாலசுந்தரம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது கழகம் பெரும் கவலை அடைகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அரியாலை ஐக்கிய கழகம்.**



## துயர் பகிர்கின்றோம்.

அரியாலையைச் சொந்த முகவரியாகவும், வவுனியா – மகாறம்பைக்குளத்தைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட எமது அன்புக்குரிய உறவினர்

**சுப்பிரமணியம் பாலசுந்தரம்**

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

10.02.2008 அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது ஆன்மா சாந்தியடைவதாக!

**துயருடன்**
**ஆ.செல்லத்துரை குடும்பம்.**

12, வில்வந் தெரு,
புங்கன்குளம், அரியாலை,
யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி

அரியாலையூர் மக்களினால் 1919ஆம் ஆண்டு முதல் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் 1977ஆம் ஆண்டுக்கான தலைவராகவும் அதன் பின்னர் பல ஆண்டுகளாகச் செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்ததோடு தற்போது விழாவை நெறிப்படுத்தும் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பதவி வகித்தவரும் விழாவன்று மேடையேற்றப்படும் பிரதான நாடகத்தில் பல ஆண்டுகளாகப் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்து அரியாலையின் கலை வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தவருமாகிய **சுப்பிரமணியம் பாலசுந்தரம்** (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் திடீர் மறைவுக்காக அரியாலை மக்களின் சார்பில் விழாவின் நடப்பு வருட நிர்வாகம் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது.

**அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா –**
**89ஆம் வருட நிர்வாகம் (2008)**

# இதய அஞ்சலி

**தோற்றம்**
**21.04.1929**

**மறைவு**
**10.02.2008**

**அமரர்**

## திரு.சுப்பிரமணியம் பாலசுந்தரம்

**(ஓய்வு பெற்ற தபாலதிபர்)**

**எமது நினைவில் அமரர் சு.பாலசுந்தரம் அவர்கள்....**

*10.02.2008* அன்று வவுனியாவில் சிவபதம் அடைந்த யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலசுந்தரம் அவர்களின் மறைவை யொட்டி எமது இதயபூர்வமான அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

எமது அரியாலையூர் ஈன்றெடுத்த உத்தம புருஷர்களில் ஒருவராகக்கணிக்கப் பெற்ற அமரர் அவர்கள் அரியாலை சனசமூக நிலையத்தின் செயற்றிறன் மிக்க முன்னாள் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர். அமரருக்கும் எமது நிலையத்திற்குமான தொடர்பு அறுபது வருடங்களிற்கு மேலானது. அவரின் அளப்பரிய சேவையை பாராட்டி 1999 ஆம் ஆண்டு இடம் பெற்ற நிலையப் பொன்விழாவில் அமரர் அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அமரர் நிலைய நிர்வாகத்தில் மட்டுமல்லாது அரியாலையில் இயங்கும் சகல மக்கள் அமைப்புக்களிலும் இணைந்து அளப்பரிய சேவை புரிந்தவர் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அரியாலை சனசமூக நிலைய வளர்ச்சியில்.....
தலைவர் *1973, 1974, 1975, 1990, 1997, 1999*
கௌரவபொருளாளர்: *1961*

அன்னாரின் மறைவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உற்றார் உறவினருக்கும் அரியாலை மக்கள் சார்பாகவும் அரியாலை சனசமூக நிலையத்தின் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மனின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம்சாந்தி!**

**நிர்வாகம்**
**அரியாலை சனசமூக நிலையம்**
**யாழ்ப்பாணம்**

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1929
.
04
.
21



இறப்பு
2008
.
02
.
10

அமரர்

## திரு.சுப்பிரமணியம் பாலசுந்தரம்


பெற்றெடுத்து பேணி வளர்த்து
வித்தைதனைக் கற்றுக் கொடுத்து
மாண்புறவே மக்களை மா நிலத்தில்
பேரோடு புகழ்பெறவே வாழவைத்து
விழி மூடி இன்று துயில்கின்றீர்
கழியாத சோகத்தால் கலங்குகின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்ரிவிஷன் நண்பர்கள்

# இதய அஞ்சலி

தோற்றம்
21.04.1929



மறைவு
10.02.2008

அமரர்

## திரு.சுப்பிரமணியம் பாலசுந்தரம்

**(ஓய்வு பெற்ற தபாலதிபர்)**

அன்பு கொண்ட உங்கள் உயிர்
ஆலமரம் சாய்ந்ததால் விழுதுகள் வாடுது
இனிய உங்கள் அன்புக்குரல் நிதமும் காதில் ஒலிக்கிறது.
தனித்து எம்மை வாழவிட்டு இன்று போனது நியாயமா?
உறவுகள் எத்தனை இருந்தென்ன உலகிலே
தேறுதலால் ஒருபோதும் தேறிடாது எம்மனம்
தேடினாலும் காண்போமா உங்கள் அன்பு முகம்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உதவி ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கமநல அபிவிருத்தி திணைக்களம்,
வவுனியா.

# நன்றிகளைப் பகிர்வோம்



எமது குடும்பத் தலைவனின் துயரச்செய்தி கேட்டு வந்து உடன் கருமமாற்றிய அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கட்கும், இறுதிக் கிரியையில் உதவி புரிந்தவர்கட்கும் துயரத்தில் பங்கு பற்றிய அனைவருக்கும், வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமும், தந்திமூலமும் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும், யாழ்ப்பாணம், இலண்டனிலுள்ள எமது இல்லங்களுக்கு துயர்பகிர வருகைதந்த உறவினர், நண்பர்கள் யாவருக்கும் மரணச் சடங்கில் பங்கு கொண்ட வ/அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், உத்தியோகத்தர்களுக்கும், செட்டிக்குள பிரதேச செயலாளர் உத்தியோகத் தர்களுக்கும், கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, விரிவுரையாளர்களுக்கும், மலர்வளையம், பூமாலைகள் போட்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்ட அன்பர்களுக்கும், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், இறுதி யாத்திரைக்கு துணைநின்ற ரசிக்கா மலர்சாலை நிறுவனத்தினருக்கும், அந்தியேட்டி கிரியையில் பங்குபற்றிய அனைவருக்கும், இம்மலரைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்டு உதவிய மல்ரிவிஷன் அச்சகத்தாருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
பாலசுந்தரம் குடும்பத்தினர்



வாழ்வைச் சுகமெனச் சுமந்த - தோள்கள்
குடும்பத்தைக் காத்த கரங்கள்
சொந்தங்களிடம் செல்ல மறவாக் கால்கள்
நல்லதே நினைத்த நெஞ்சு
ஓயாத உழைப்பு. மாறாத புன்னகை
யாவும் கல்வெட்டாய் - உறவுகளின் நினைவில்...

-மருமக்கள்-

மல்ரிவிஷன் 024 2223669